செ.வெ.எண்:56 நாள்:22.11.2021

## கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மத நல்லிணக்க வாரம் 2021-கடைபிடிக்கப்படுவதையொட்டி மத நல்லிணக்க கொடி நாள் நிதி வசூலை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் இன்று (22.11.2021) துவக்கி வைத்தார்.

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (22.11.2021) மத நல்லிணக்க வாரம் 2021 கடைபிடிக்கப்படுவதையொட்டி, மத நல்லிணக்க கொடி நாள் நிதி வசூலை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

### மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

சாதி, இனம் மற்றும் பயங்கரவாத வன்முறைகளில் அனாதையாகவோ அல்லது ஆதரவற்றவர்களாகவோ இருக்கும் குழந்தைகளின் கல்வி மற்றும் மறு வாழ்விற்காக தன்னார்வலர்களிடமிருந்து மதநல்லிணக்க கொடி நாள் நன்கொடை வசூலிக்க நாடு முழுவதும் தேசிய மதநல்லிணக்க வாரம் பிரதி வருடம் நவம்பர் 19 முதல் 25 வரையும் மற்றும் நவம்பர் 25-ம் தேதி கொடி நாளாகவும் கடைபிடிக்கப்படுகிறது.

எனவே மதநல்லிணக்க கொடி நாள் நன்கொடை அளிக்க விருப்பமுள்ளவர்கள் "Secretary, National Foundation for Communal Harmony, New Delhi” என்ற பெயருக்கு கேட்பு வரைவோலையாவோ (DD) / காசோலையாகவோ (Cheque) "Secretary, National Foundation for Communal Harmony, 9th Floor ‘C’ Wing, LokNayakBhavan, Khan Market, New Delhi-110003” என்ற முகவரிக்கு அனுப்பிடவும், மேலும் நேரடி வங்கி பரிமாற்றத்தின் வாயிலாக நன்கொடை அளிப்பவர்கள் கீழ்கண்ட வங்கி கணக்கு எண்ணிற்கு நன்கொடைகளை வழங்கி ஆதரவற்ற மற்றும் அனாதை குழந்தைகளின் கல்வி மற்றும் மறுவாழ்விற்கு உதவுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

Bank Details:

| Central Bank of India | State Bank of India | Bank of India |
|---|---|---|
| Name of A/C holder: National Foundation for Communal Harmony, | Name of A/C holder: National Foundation for Communal Harmony, | Name of A/C holder: National Foundation for Communal Harmony, |
| Account Number:1065439058 | Account Number: 10569548047 | Account Number: 600710110006040 |
| IFSC Code:CBIN0280310 | IFSC Code: SBIN0000583 | IFSC Code: BKID0006007 |

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.செ.ராஜேஸ்வரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.பி.முருகன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திருமதி.பாக்கியலட்சுமி, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.ஜி.கோபு மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**